தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1981ஆம் ஆண்டு ஏப்ரல் 9

பங்குனி 27, ரௌத்திரி—திருவள்ளுவர் ஆண்டு 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு"

மாறுபட்ட கொள்கைகளை உடைய பல்வேறு குழுக்களும், உடனிருந்தே பாழ்படுத்தும் உட்பகையும், அரசனைத் துன்புறுத்தும் கொலைத் தொழில் பொருந்திய குறும்பரும் இல்லாததே நாடாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தென்னாற்காடு மின் திட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

*வினா எண். 708—திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மின் திட்டத்தை (தமிழ்நாடு மின் சார வாரியம்) இரண்டு திட்டங்களாகப் பிரிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்

(அ) ஆம்.

(ஆ) இப்பொருள் மின் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எப்போது இந்த மின் திட்டத்தை இராண்டாகப் பிரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விரைவிலே அதுபற்றி மின் வாரியம் முடிவெடுக்கும்.

திரு செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டாக பிரிக்க இருக்கும் அந்தத் திட்டத்தில் எந்தெந்த பகுதிகள் சேர்க்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும், ஏற்கனவே தென் ஆற்காடு மாவட்டம் இரண்டு அபிவிருத்தி மாவட்டங்களாக இயங்குகின்றது. அந்த அடிப்படையில் மின் வாரியம் பரிசீலிக்கும்.

ஆதிதிராவிடர்கள் மற்றும் மலைவாழ் மக்களுக்கு விவசாய பம்பு செட்டுகளுக்கான மின் இணைப்பில் முன் உரிமை வழங்கல்.

*வினா எண் 709—திருமதி தா. இராசம்மாள் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிப்பதில் ஆதிதிராவிடர்களுக்கும் மலைவாசிகளுக்கும் முன் னுரிமை வழங்க அரசு அனுமதித்துள்ளதா?

(ஆ) ஆதிவாசிகள், அறிவிக்கப்பட்ட பகுதிகள் அல்லாத இடங்களில் விவசாயம் செய்தாலும் அவர்களுக்கும் இந்த சலுகை விரிவு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிப்பதில் மலைப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரின் (*Tribal People*) பம்பு செட்டுகளுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது,

(ஆ) ஆதிவாசிகள், அறிவிக்கப்பட்ட பகுதிகள் அல்லாத இடங்களில் விவசாயம் செய்தால் அவர்களுக்கு தனியான முன் னுரிமை அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு தி. க. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் இணைப்பு கொடுப்பதில் ஆதிவாசிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே மாதிரி 2, 3 ஏக்கர்கள் வைத்திருக்கும் சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.